## கவனத்தை திசை திருப்பும் முயற்சிக்கு இடம் தராதீர்! நம் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி!

# வெற்றியை எட்டும் வரை கவனம் சிதறாமல் உழையுங்கள்!

### வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து – காணொலி வாயிலான மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.12.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, வரைவு வாக்காளர் பட்டியல் (Draft Electoral Rolls – SIR 2026) சரிபார்த்தல் குறித்து தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும் – துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, டிச. 23 –

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், காணொலி வாயிலாக நடைபெற்ற வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் – தொகுதிப் பார்வை-யாளர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.**

**அப்போது கழகத் தலைவர் அவர்கள், “நமது கவனத்தை திசை திருப்பும் முயற்சிக்கு இடம் தர வேண்டாம்; நம் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி; வெற்றியை எட்டும் வரையில் கவனம் சிதறாமல் உழைக்க வேண்டும்”! என்று வலியுறுத்தினார்.**

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (21.12.2025) காணொலி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:–**

*வாக்குச்சாவடிவாரியாக மைக்ரோ லெவலில் கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஒரே ஒருத்தர் தவறுதலாக விடுபட்டு இருந்தால்கூட வாக்காளர் பட்டியலில் இணைக்க வேண்டும்*

S.I.R நடைமுறையை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் கழகத்தின் போர்ப்படைத் தளபதிகளான எல்லாருக்கும் பாராட்டுகள்!

தமிழ்நாட்டின் 15 சதவிகித வாக்காளர்களை, அதாவது 97 லட்சம் வாக்காளர்களை நீக்கி, வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளார்கள். இடம் பெயர்ந்தவர்கள் என்று மட்டும் சுமார் 66 லட்சம் பேரை நீக்கியிருக்கிறார்கள்.

S.I.R பணிகளை அவசரகதியில ஆரம்பித்த போதே “இது, பல்வேறு முறைகேடுகளுக்கு வழிவகுக்கும்; தகுதியான தமிழ்நாட்டு வாக்காளர்கள் நீக்கப்பட வாய்ப்புள்ளது” என முன்கூட்டியே எச்சரித்தோம்! உச்சநீதிமன்றத்திலேயும் வழக்குத் தொடுத்திருக்கிறோம்.

**பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றினீர்கள்!**

மாநில - மாவட்ட நிர்வாகிகள் தொடங்கி, தொகுதிப் பார்வையாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் -BLA - BDA -

BLC - சார்பு அணியினர் என, ஒவ்வொரு உடன்பிறப்பும், பம்பரமாக உழைத்தீர்கள்!

**நாம் சந்தேகப்படக் காரணம்!**

அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் களத்துக்கே வரவில்லை. துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. அதனால்தான், நாம் சந்தேகப்பட

வேண்டியதாக உள்ளது. எனவே, நீக்கப்பட்ட 97 லட்சம் வாக்காளர்களில் நம் வாக்காளர்கள் இருக்கிறார்களா என கவனமாகப் பார்க்க வேண்டும்.

168 தொகுதிகளில் 10 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். இதை நாம் வாக்குச்சாவடி வாரியாகப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, கும்மிடிப்பூண்டி தொகுதியின் முதல் வாக்குச்சாவடியில் 40 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளார்கள். நீக்கப்பட்ட அந்த 40 பேர்களில், 4 பேர் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பு மூலமாகச் சேர்ந்தவர்கள்.

அதில் ஒருவர் இறந்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதேபோல, மற்ற 3 பேரையும் எதற்காக நீக்கியுள்ளார்கள் என்று சரிபார்க்க வேண்டும். நாம் இவ்வளவு கவனமாக இருந்தும் -ஒரே வாக்குச்சாவடியில், ‘ஓரணியில் தமிழ்நாட்டில்’ இணைந்த 4 பேர் விடுபட்டிருக்கிறார்கள் என்றால் நாம் இன்னும் விழிப்போடு செயல்பட வேண்டும் என அர்த்தம்!

**ஒரே ஒருத்தர் கூட தவறுதலாக விடுபட்டு விடக்கூடாது!**

அடுத்து நம்முடைய பணி -இவர்கள் இறந்துவிட்டார்களா, இடம் மாறிவிட்டார்களா, டபுள் எண்ட்ரியா எனச் சரிபார்க்க வேண்டும். ஒரே ஒருத்தர் தவறுதலாக விடுபட்டு இருந்தால்கூட ஃபார்ம்-6 நிரப்பிக் கொடுத்து வாக்காளர் பட்டியலில் இணைக்க வேண்டும்.

நானே இவ்வளவு மைக்ரோ அளவில் பார்க்கிறேன் என்றால் நீங்கள் எல்லோரும் இதனை எவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனப் புரிந்து கொள்ள வேண்டும். கவனமாகப் பார்த்து சரி செய்ய வேண்டியது - ஒவ்வொரு மாவட்டச் செயலாளர் - தொகுதிப் பார்வையாளர்களின் பொறுப்பு ஆகும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நீக்க ப்பட்டவர்கள் பட்டியலும் அதில் யாரெல்லாம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர்கள் என்ற விவரமும் நாளைக்குள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விவரங்களை முழுமையாகச் சரிபார்த்து விடுபடல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

BLA2-களும், BLC-களும் படிவங்களை சரியாகப் பயன்படுத்தி, சேர்த்தல் - நீக்குதல் செய்வதை மேற்பார்வையிட வேண்டும்.

**கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு கண்காணித்திடுவீர்!**

நான் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு பார்ப்பது போலவே நீங்களும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அடுத்ததாக புதிய வாக்காளர்கள் இணைக்கப்படுவதையும் தொடர்ந்து கவனிக்க வேண்டும். போலிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு முழுக்க இருந்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை, 68 ஆயிரத்து 467-ல் இருந்து, 75 ஆயிரத்து 32 ஆகியிருக்கிறது.

பூத் எண் மட்டும் மாறியிருக்கும் வாக்குச்சாவடிகளுக்கு, ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கும் BLA-2க்கள் தொடர்வதை உறுதி செய்ய வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் வாக்குச்சாவடிகள் அனைத்துக்கும் புதிய BLA-2 மற்றும் BLC பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும்!

**குறுக்கு வழியில் வீழ்த்த எதிரிகள் முயலுவார்கள்!**

நம்மை நேர்மையாக- நேர்வழியில் வீழ்த்த முடியாத பாசிச சக்திகளும் -எதிரிகளும், குறுக்கு வழியில் காரியம் சாதிக்க நினைப்பார்கள். அதற்கு நாம் கடுகளவுகூட இடம் தரக்கூடாது!

நம் கவனத்தைத் திசைதிருப்பவும் - நம்முடைய உழைப்பை வீணாக்கவும் எதிரிகள் கூட்டமும், வீணர்கள் கூட்டமும் முயற்சி செய்வார்கள். அதையெல்லாம் புறந்தள்ளி, தேர்தல் பணி ஆற்றுங்கள்!

**முழு பலத்தையும் கொடுத்து ஓட வேண்டும்!**

வெற்றிக் கோட்டை நெருங்கும் நேரத்தில் பதற்றமோ -அசதியோ கூடாது. இனிமேல் தான் நம் முழு பலத்தையும் கொடுத்து ஓட வேண்டும்.

களத்தில் நாம்தான் வலிமையாக உள்ளோம். நம் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி. வெற்றியை எட்டும் வரைக்கும் கவனம் சிதறாமல் உழையுங்கள்! உழையுங்கள்!

**டெல்லி படையெடுப்புக்கு தமிழ்நாடு ஒருபோதும் அஞ்சாது!**

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடே வெல்லும்!**

இவ்வாறு - கழகத் தலைவர் -முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்கத் தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-

